# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2301/47 - 2022 ඔක්තෝබර් මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.13

*2301/47 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

*2022, யூலை 22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம், கௌரவ சனாதிபதியினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 44 ஆம் உறுப்புரையின் 1 (ஆ) பிரிவின் படி எனக்கு சாட்டப்பட்டுள்ள விடயப் பொறுப்புகள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் ஆகியவற்றில் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், பணிகள், நிறுவனங்கள், கருத்திட்டங்கள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை இலங்கைச் சனநாயக சேசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 45 (4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனக்கு சாட்டப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2022.10.07 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கௌரவ விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சருக்கு சாட்டப்படுகின்றேன் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**ரொஷான் ரணசிங்க,**
விளையாட்டுத் துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சர்,

கொழும்பு,
*2022, ஒற்றோபர் 07.*


1A - G 37769 — 08 (2022/10)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை இல 01**

| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், கருத்திட்டங்கள் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
|---|---|---|
| 1. இளைஞர்களின் ஆற்றலானது சமூக விரோத அம்சங்களுக்குத் திரும்புவதைத் தடுத்து பாடசாலைக் கல்வியில் இருந்தே இணை பாடவிதான செயற்பாடாகவும் இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஊடாகவும் இளைஞர்களுக்கு விளையாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல் | 1. தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டுத் தொகுதி | • விளையாட்டில் ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம் (2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டம்) |
| 2. கல்விக்கு மேலதிகமாக உடற்கல்வி மற்றும் விளையாட்டு ஆகியவற்றிற்கு பாடசாலை மாணவர்களை ஈர்த்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான சிறுவர் சந்ததியொன்றை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல். | 2. இலங்கை ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம் | |
| 3 நாடளாவிய ரீதியில் உள்ள கிராமிய பாடசாலைகளில் விளையாட்டில் திறமையுள்ள பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே கண்டறிந்து அவர்களின் திறமைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு தேவையான உரிய போஷாக்கு மற்றும் பயிற்சி உள்ளிட்ட வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் | 3. தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையம் | |
| 4 நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள விளையாட்டு அரங்குகளையும் விளையாட்டு மைதானங்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரப்படுத்தலுக்கு உட்படுத்தி அவற்றை அதற்குகந்த வகையில் அபிவிருத்தி செய்தல். | | |
| 5 உள்ளூர் பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல். | | |
| 6 கிராமப்புற விளையாட்டு வளர்ச்சிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்களை விநியோகித்தல். | | |
| 7 இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களை போதைப் பொருட்களிலிருந்து மீட்டெடுப்பதற்கு ஆலோசனைகளை வழங்குதல் | | |

| | கடமைகளும் பணிகளும் | திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், கருத்திட்டங்கள் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
|---|---|---|---|
| 8 | தேசிய மட்டத்திலான விளையாட்டு வீரர்களின் தலைமைத்துவத்தையும் ஆளுமையையும் விருத்தியாக்குதல். | | |
| 9 | விளையாட்டுக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல். | | |
| 10 | பொது மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | | |
| 11 | வேலையற்ற இளைஞர்களை மையமாகக் கொண்ட திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல். | | |
| 12 | இளைஞர் அமைப்புக்கள் தொடர்பான ஒழுங்குறுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |

EOG *10 - 0110*